**<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>**

O.S. No. 21 of 2022

வா.சா.1 Sunbeam

<u>12.06.2024</u>

**<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான், சார்லஸ் பெஞ்சமின், ரூத், மார்கரேட் ஆகியோர் சேர்ந்துதான் வழக்கு சொத்தை அரசாங்கத்திற்கு விற்றோம் என்றால் சரிதான். எங்களிடம் இருந்து சொத்தை வாங்கும் போது கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வனத்துறை அதிகாரி ஆகியோர் சேர்ந்து இடத்திற்கும், அங்கு இருக்கும் மரத்திற்கும் சேர்த்து விலையை நிர்ணயித்தார்கள் என்றால் சரிதான், ஆனால் எங்களுக்கு அந்த இடத்திற்கான வழிகாட்டுதல் மதிப்புபடி பணம் கொடுக்கப்படவில்லை.

கோட்டாட்சியர் எங்களுடைய மொத்த இடத்திற்கு ரூபாய் 51,81,515/– (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சத்து எண்பத்து ஒன்று ஆயிரத்து ஐநூற்று பதினைந்து) என்றுதான் விலையை நிர்ணயித்தார்கள் என்றால் சரிதான். மாவட்ட வன அதிகாரி அங்கு நிற்கும் மரங்களுக்கு ரூபாய் 83,79,408/– (ரூபாய் எண்பத்து மூன்று லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து நானூற்று எட்டு) என்று விலை நிர்ணயித்தார் என்றால் விலையை குறைவாக நிர்ணயித்துள்ளார். மொத்த மதிப்பு ரூபாய் 1,35,60,924 (ஒரு

கோடியே முப்பத்து ஐந்து லட்சத்து அறுபது ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து நான்கு) என்றால் சரிதான். பின்பு மாவட்ட ஆட்சியரிடம் Private Negotiation–படி சொத்து மதிப்பு ரூபாய் 1,55,93,605/– (ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து லட்சத்து தொண்ணூற்று மூன்று ஆயிரத்து அறுநூற்று ஐந்து) ஆக ஒத்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பங்கிற்காக 32,35,000/– (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரம்) நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நாங்கள் அனைத்தும் தெரிந்துதான் Negotiation படி முறையான விலையை பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. சட்டப்படி எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

A ABDUL KADHAR

Digitally signed by A ABDUL KADHAR
Date: 2024.06.12 13:19:31 +0530